ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2051/13 - 2017 දෙසැම්බර් මස 27 වැනි බදදා - 2017.12.27

*2051/13 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வட மாகாண மாகாண சபை

*2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வட மாகாண ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்*

*வட மாகாண மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வட மாகாண ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்திற்கு வட மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*க. தெய்வேந்திரம்,*
*செயலாளர்,*
*பேரவைச் செயலகம்,*
*வட மாகாண சபை.*

*பேரவைச் செயலகம்,*
*ஏ 9 வீதி,*
*கைதடி,*
*2017, திசெம்பர் 19.*

### வட மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்

*வட மாகாணசபையின் 2018 ஆம் நிதியாண்டு செலவுகளுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அந்நிதியாண்டில் தேவைப்படும் நிதி, மாகாண சபை நிதியத்தினால் அல்லது மாகாண சபையின் அல்லது மாகாண சபைக்கு தகுதி எனக்கொள்ளக்கூடிய வேறு நிதியத்தினால் அல்லது நிதியங்களினால் முற்பணம் வழங்க வசதிகளை செய்து கொடுப்பதற்கும், மாகாண சபையின் திரட்டு நிதியத்திற்கு அப்பணத்தை மீளச் செலுத்த ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர் விளைவான விடயங்களை ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச் சட்டம்.*

**வட மாகாண சபையினால் கீழ் வருமாறு ஆக்கப்படுகின்றது.**

சுருக்கப் பெயர்.

1. இந் நியதிச்சட்டம் "2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச்சட்டம்" எனக் குறிப்பிடப்படும்.

2018 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீடு.

2. (i) ஏதேனும் நிதித்தொகையொன்றை செலவிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகின்ற யாதாயினுமொரு சட்டத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்நியதிச்சட்டத்தில் 2018 நிதியாண்டு எனக் குறிப்பிடப்படும் 2018 சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடையும் காலத்திற்கு இடைப்பட்ட காலங்களில் வட மாகாண சபையின் செலவுகளுக்கு என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை இருபத்து ஆறாயிரத்து எழுநூற்று ஐம்பத்து நான்கு மில்லியன் அறுபத்து ஒரு ஆயிரம் ரூபாவானது (ரூபா. 26,754,061,000/=)

(அ) மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் உதவிகளாலும்

அத்துடன்

(ஆ) மாகாண சபை நிதியத்தினால் அல்லது தகுதி எனக்கொள்ளக்கூடிய வேறொரு நிதியத்தினால் அல்லது நிதியங்களினால் அல்லது தீர்வு செய்கைகளினால் இச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டவாறு செலவு செய்யப்படுதல் வேண்டும்.

(ii) இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் முதலாவது நிரலில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சார்பான வடக்கு மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டுக்கான செலவீனங்கள் யாவும் வடக்கு மாகாண சபையின் அந்நிதியாண்டின் அவ்விடயத்துக்கான பெறுவனவுகளில் இருந்து மாத்திரமே செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் குறித்த செலவீனமானது அந்த விடயத்திற்கெதிரே குறிக்கப்பட்டுள்ள எல்லைகளை விஞ்சாது இருத்தல் வேண்டும்.

3. இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் 2018 நிதியாண்டின் முடிவில் நிலுவையாகவுள்ள வரவு மீதி, சொல்லப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதே தலைப்பில் அதி உச்ச எல்லையைத் தாண்டக் கூடாது என்பதுடன் குறித்த நிதியாண்டின் முடிவில் அவ்விடயத்தின் மொத்தப்பரிப்புக்கள் காட்டப்பட்டுள்ள எல்லைகளை விஞ்சவும் கூடாது.

நிகழ்ச்சித் திட்டம் மீண்டெழும் செலவினம் தொடர்பாக ஒதுக்கப்பட்டு அதனால் செலவிடப்படாத நிதி அந்நிகழ்ச்சித் திட்டத்தின் வேறு ஒதுக்கீடு ஒன்றிற்கு அல்லது அச்செலவுகளை வேறு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற்றம் செய்யும் அதிகாரம்.

4. (i) இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதாவது ஒரு தலைப்பின் கீழ் ஏதாவது நிகழ்ச்சித்திட்டத்தில் மீண்டெழும் செலவினங்களுக்கு அட்டவணையின் ஏற்பாடுகளுக்கேற்ப நிதி ஒதுக்கப்பட்டு இருப்பினும் அது செலவிடப்படாதிருந்து அல்லது எதிர்காலத்தில் செலவு செய்யப்படாது எனக்கருதக்கூடிய ஏதாவது பணத்தொகை அந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலதனச் செலவின் ஒதுக்கீட்டிற்கு அல்லது அத்தலைப்பின் கீழ் வேறு ஏதாவது நிகழ்ச்சித்திட்டத்தின் மீண்டெழும் செலவிற்கோ அல்லது மூலதனச் செலவிற்கோ ஒதுக்கீடு செய்வதற்கு பிரதம செயலாளரின் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தரின் உத்தரவுப் பிரகாரம் மாற்றம் செய்யலாம்.

மூலதன செலவினங்களது ஒதுக்கீடுகளை வேறு தலைப்புக்களுக்கு மாற்றுவதற்குள்ள அதிகாரம்.

(ii) மூலதன செலவீனங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையினை அட்டவணை ஒன்றில் காட்டப்பட்டுள்ள வேறு ஏதேனும் தலைப்பிற்கு மாற்றம் செய்வதற்கு மாகாணசபையின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

ஏற்கனவே அதிகாரம் அளிக்கப்பட்ட செலவுகளை வரையறுப்பதற்கு பிரதான அமைச்சர் அவர்களுக்கு உள்ள அதிகாரம்.

5. (i) அதிகாரம் அளிக்கப்பட்ட செலவுகளைச் செய்வதற்கு வரிகளிலிருந்தும், வேறு ஏதேனும் மூலங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள் எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகையைவிட குறையலாம் என,

அல்லது

(ii) ஏதாவது விடயம் அல்லது விடயங்களுக்கு ஆரம்பத்தில் ஒதுக்கிய பணம் மேலும் தேவைப்பட மாட்டாது என முதலமைச்சர் திருப்தியடையும் நிலையில், மாகாண நிதியத்தில் அல்லது மாகாண சபையின் அல்லது மாகாண சபைக்கு தகுதி எனக் கொள்ளக்கூடிய வேறு நிதியத்தில் அல்லது வேறு நிதியங்களில் இருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் செலவு செய்வதற்கு முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணம் முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதியினை அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செலவினத்தை எதிர்கொள்வதற்காக மீளப்பெறுவதற்கு முதலமைச்சரின் அனுமதியுடன் பிரதம செயலாளருக்கு முடியுமாதல் வேண்டும்.

6. முதலமைச்சர் 2019 மாச்சு மாதம் 31 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் உத்தரவு ஒன்றின் மேல் –

இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதியுயர் எல்லை, ஆகக் குறைந்த எல்லை என்பவற்றை மாற்றுவதற்கு உள்ள அதிகாரம்.

(i) இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் அதிஉயர் எல்லைகளுள் எதனையும்,

(ii) இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும் மாற்றவோ அல்லது திருத்தவோ முடியும்.

7. வடக்கு மாகாண சபையினால் ஏதேனும் பொருத்தமான பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின் தோதான நிரல்களுக்கு ஏதேனும் செயற்பாட்டைச் சேர்ப்பதன் மூலமும், அத்துடன்,

இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் திருத்தஞ் செய்வதற்கு மாகாண சபைக்கு உள்ள அதிகாரம்.

(i) அத்தகைய விடயம் தொடர்பான எல்லா அதியுயர் எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவையேனும் ஒன்றையும்,

(ii) அத்தகைய விடயம் தொடர்பான ஆகக்குறைந்த எல்லைகளையும் ஏற்பாடு செய்து திருத்தம் செய்யலாம்.

8. பிரதிப் பிரதம செயலாளர் நிதி அலுவலகத்தின் செலவின நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கருத்திட்டம் நான்கின் (421-08-04) கீழ் குறித்துக் காட்டப்படும் செலவினங்கள் பிரதம செயலாளரினால் முதலாவது அட்டவணையின் எந்தவொரு செலவினத் தலைப்பிற்கும் மாற்ற முடியும். எவ்வாறாயினும் குறித்த பரிமாற்றம் குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றின் மூலம் மாகாண சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

9. இந்நியதிச்சட்டத்தின் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் தமிழ் மொழியே மேலோங்கி நிற்கும்.

வேறுபாடு ஏற்பட்டால் தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.

## முதலாவது அட்டவணை

| | | | | | மீண்டுவரும் செலவினம் (ரூபா) | மூலதனச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| **ஆளுநர் செயலகம்** | | | | | | |
| தலைப்பு | 400 | | | | | |
| | | **மீண்டுவரும் செலவினம்** | | **63,613,000** | | |
| | | **மூலதனச் செலவினம்** | | **2,000,000** | | |
| | | சி.பி.ஜி | 2,000,000 | | | |
| தலைப்பு | 400 | | | | | |
| தலைப்பு | 400 | **ஆளுநர் செயலகம்** | | | | |
| | | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 63,613,000 | 2,000,000 |
| **மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு** | | | | | | |
| தலைப்பு | 401 | | | | | |
| | | **மீண்டுவரும் செலவினம்** | | **27,319,000** | | |
| | | **மூலதனச் செலவினம்** | | **1,000,000** | | |
| | | சி.பி.ஜி | 1,000,000 | | | |
| தலைப்பு | 401 | | | | | |
| தலைப்பு | 401 | **மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு** | | | | |
| | | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 27,319,000 | 1,000,000 |

| | | | | மீண்டுவரும் செலவினம் (ரூபா) | மூலதனச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| **மாகாண பேரவைச் செயலகம்** | | | | | |
| தலைப்பு 402 | | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | **161,408,000** | | |
| | **மூலதனச் செலவினம்** | | **229,500,000** | | |
| | சி.பி.ஜி | 229,500,000 | | | |
| தலைப்பு 402 | | | | | |
| தலைப்பு 402 | **மாகாண பேரவைச் செயலகம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 161,408,000 | 229,500,000 |
| **முதலமைச்சரின் அமைச்சு - நிதியும் திட்டமிடலும் , சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சு** | | | | | |
| தலைப்புகள் : | 410, 470, 481, 471, 432, 426 | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | **2,638,835,000** | | |
| | **மூலதனச் செலவினம்** | | **932,700,000** | | |
| | சி.பி.ஜி | 10,450,000 | | | |
| | பி.எஸ்.டி.ஜி | 905,000,000 | | | |
| | என்.ஆர்.சி.பி | 17,250,000 | | | |
| தலைப்பு 410 | **முதலமைச்சரின் அமைச்சு - நிதியும் திட்டமிடலும் , சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சு** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 68,878,000 | 132,200,000 |
| தலைப்பு 470 | **மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 60 - சனசமூக அபிவிருத்தி | | | 1,847,082,000 | 272,500,000 |
| தலைப்பு 481 | **மாகாண காணி நிர்வாகத் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 40 - காணி நிர்வாகமும் அபிவிருத்தியும் | | | 89,665,000 | 5,750,000 |
| தலைப்பு 471 | **மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 60 - சனசமூக அபிவிருத்தி | | | 96,161,000 | 41,000,000 |
| தலைப்பு 432 | **மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 50 - பெருந்தெருக்களின் கட்டுமானமும் பராமரிப்பும் | | | 493,897,000 | 478,750,000 |
| தலைப்பு 426 | **மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 10 - வரி மற்றும் தீர்வைகள் மீதான நிர்வாகம் | | | 43,152,000 | 2,500,000 |
| **பிரதம செயலாளர் செயலகம்** | | | | | |
| தலைப்புகள் : | 420, 421, 422, 423, 424, 425, 430 | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | **1,471,666,000** | | |
| | **மூலதனச் செலவினம்** | | **628,422,000** | | |
| | சி.பி.ஜி | 250,550,000 | | | |
| | பி.எஸ்.டி.ஜி | 377,872,000 | | | |
| தலைப்பு 420 | **பிரதம செயலாளர் செயலகம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 83,169,000 | 144,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 09 - மனிதவள முகாமைத்துவம் | | | 29,000,000 | 1,000,000 |
| தலைப்பு 421 | **பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிதி** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 08 - நிதி முகாமைத்துவம் | | | 1,118,047,000 | 448,322,000 |
| தலைப்பு 422 | **பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 52 - பிராந்திய அபிவிருத்தி | | | 56,405,000 | 1,500,000 |

| | | | | மீண்டுவரும் செலவினம் (ரூபா) | மூலதனச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| தலைப்பு 423 | **பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - பொறியியல்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 15 - புனர்வாழ்வும் புனருத்தாரணமும் | | | 14,880,000 | 1,500,000 |
| தலைப்பு 424 | **பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - ஆளணிப் பயிற்சி** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 09 - மனிதவள முகாமைத்துவம் | | | 21,837,000 | 12,000,000 |
| தலைப்பு 425 | **மாகாண இறைவரித் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 10 - வரி மற்றும் தீர்வைகள் மீதான நிர்வாகம் | | | 16,018,000 | 600,000 |
| தலைப்பு 430 | **மாகாண கட்டடங்கள் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 15 - புனர்வாழ்வும் புனருத்தாரணமும் | | | 132,310,000 | 19,500,000 |
| **மாகாண விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு** | | | | | |
| தலைப்புகள் : | 411, 480, 482, 431 | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | **880,813,000** | | |
| | **மூலதனச் செலவினம்** | | **474,000,000** | | |
| | சி.பி.ஜி | 24,000,000 | | | |
| | பி.எஸ்.டி.ஜி | 430,000,000 | | | |
| | சி.எஸ்.ஆர்.ஜி | 20,000,000 | | | |
| தலைப்பு 411 | **மாகாண விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 49,254,000 | 61,000,000 |
| தலைப்பு 480 | **மாகாண விவசாயத் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 27,327,000 | 162,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 44 - விவசாய அபிவிருத்தி | | | 231,400,000 | |
| தலைப்பு 482 | **மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 63,445,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 45 - கால்நடை அபிவிருத்தி | | | 188,000,000 | 133,500,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 56 - ஆராய்ச்சிகளும் அபிவிருத்தியும் (பொருளாதார விவகாரம்) | | | 6,487,000 | |
| தலைப்பு 431 | **மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 43 - நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் | | | 314,900,000 | 117,500,000 |
| **மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு** | | | | | |
| தலைப்புகள் : | 412, 460, 461 | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | **11,110,848,000** | | |
| | **மூலதனச் செலவினம்** | | **610,000,000** | | |
| | சி.பி.ஜி | 15,000,000 | | | |
| | பி.எஸ்.டி.ஜி | 495,000,000 | | | |
| | ரி.எஸ்.ஈ.பி | 55,000,000 | | | |
| | ஜி.ஈ.எம்.பி | 45,000,000 | | | |
| தலைப்பு 412 | **மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 78,120,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 09 - மனிதவள முகாமைத்துவம் | | | 12,651,000 | 7,500,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 80 - ஆரம்ப நிலைக் கல்வி | | | 172,524,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 93 - சமயம் மற்றும் கலாச்சார விவகாரங்கள் | | | 52,405,000 | 16,000,000 |

| | | | | மீண்டுவரும் செலவினம் (ரூபா) | மூலதனச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| தலைப்பு 460 | **மாகாண கல்வித் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 574,397,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 80 - ஆரம்ப நிலைக் கல்வி | | | 3,215,395,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 81 - இரண்டாம் நிலைக் கல்வி | | | 6,862,941,000 | 555,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 87 - கல்வித்துறைக்கு உட்பிரவேசித்தலையும் பங்குபற்றலையும் அதிகரிக்க செய்தல் | | | 57,771,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 88 - கல்வித்துறைக்கு திட்டமிட்ட சிறந்த சேவையினை வழங்கல் | | | 6,618,000 | |
| தலைப்பு 461 | **மாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 90 - மகிழ்வூட்டுதலும் விளையாட்டும் | | | 78,026,000 | 31,500,000 |

**மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு**

தலைப்புகள் : 413, 450, 451, 441

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மீண்டுவரும் செலவினம்** | | **5,855,841,000** | | |
| | **மூலதனச் செலவினம்** | | **881,300,000** | | |
| | சி.பி.ஜி | 11,500,000 | | | |
| | பி.எஸ்.டி.ஜி | 545,000,000 | | | |
| | எச்.எஸ்.டி.பி | 324,800,000 | | | |
| தலைப்பு 413 | **மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 48,802,000 | 1,500,000 |
| தலைப்பு 450 | **மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 47,317,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 09 - மனிதவள முகாமைத்துவம் | | | 4,536,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 70 - வைத்தியசாலை சேவைகள் | | | 409,721,000 | 705,800,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 71 - மக்கள் சுகாதார சேவைகள் | | | 4,196,609,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 72 - பொதுச் சுகாதார சேவைகள் | | | 723,893,000 | |
| தலைப்பு 451 | **மாகாண சுதேச மருத்துவ சேவைகள் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 50,412,000 | 72,500,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 73 - சுதேச வைத்தியத்துறை | | | 237,871,000 | |
| தலைப்பு 441 | **மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 95 - சமூக பாதுகாப்பு | | | 136,680,000 | 101,500,000 |

**மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு**

தலைப்புகள் : 414, 490, 440, 472, 403

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மீண்டுவரும் செலவினம்** | | **700,596,000** | | |
| | **மூலதனச் செலவினம்** | | **84,200,000** | | |
| | சி.பி.ஜி | 7,200,000 | | | |
| | பி.எஸ்.டி.ஜி | 77,000,000 | | | |
| தலைப்பு 414 | **மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | | | 44,574,000 | 1,000,000 |
| தலைப்பு 490 | **மாகாண தொழிற்துறைத் திணைக்களம்** | | | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 51 - கைத்தொழில் அபிவிருத்தி | | | 81,910,000 | 37,000,000 |

| | | மீண்டுவரும் செலவினம் (ரூபா) | மூலதனச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| தலைப்பு 440 | **மாகாண சமூக சேவைகள் திணைக்களம்** | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 95 - சமூக பாதுகாப்பு | 397,860,000 | 42,000,000 |
| தலைப்பு 472 | **மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்** | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 53 - கூட்டுறவு அபிவிருத்தி | 163,801,000 | 4,000,000 |
| தலைப்பு 403 | **மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு** | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | 12,451,000 | 200,000 |
| | மொத்தம் | **22,910,939,000** | **3,843,122,000** |
| | | | **26,754,061,000** |

**மூலதனச் செலவினங்களின் விபரம்**

| | |
|---|---|
| பிரமாண அடிப்படையிலான கொடை (CBG) | 551,200,000 |
| மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை (PSDG) | 2,829,872,000 |
| பாடசாலைக் கல்வியை ஓர் அறிவு மையத்தின் அடிப்படையாக மாற்றும் செயற்திட்டம் (TSEP) | 55,000,000 |
| சுகாதாரத் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் (HSDP) | 324,800,000 |
| வடக்கு மாகாண வீதி இணைப்பு கருத்திட்டம் (மேலதிக நிதியிடல்) (NRCP) | 17,250,000 |
| பொதுக்கல்வி நவீனமயமாக்கல் கருத்திட்டம் (GEMP) | 45,000,000 |
| கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு கொடை (CSRG) | 20,000,000 |

## இரண்டாவது அட்டவணை

## அரச ஊழியர் முற்பணக் கணக்கு மற்றும் வர்த்தக முற்பணக் கணக்கு

ரூபா.

| தொ. இல. | அமைச்சு/ திணைக்களம் | விடய இலக்கம் | செயற்பாட்டின் பெயர் | அதியுயர் செலவின எல்லை | ஆகக் குறைந்த அறவீட்டு எல்லை | அதியுயர் வரவு மீதி எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | I | II | III | IV | V | VI |
| 1 | ஆளுநர் செயலகம் | 400011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,800,000 | 1,050,000 | 4,828,000 |
| 2 | மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு | 401011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,600,000 | 800,000 | 3,290,000 |
| 3 | மாகாண பேரவைச் செயலகம் | 402011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,500,000 | 950,000 | 2,160,000 |
| 4 | முதலமைச்சரின் அமைச்சு - நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சு | 410011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 2,800,000 | 1,450,000 | 6,486,000 |
| 5 | மாகாண உள்ளூராட்சி திணைக்களம் | 470011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 9,000,000 | 6,200,000 | 23,676,000 |
| 6 | மாகாண காணி நிர்வாகத் திணைக்களம் | 481011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 4,200,000 | 2,900,000 | 10,305,000 |
| 7 | மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் | 471011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 6,000,000 | 3,500,000 | 16,247,000 |
| 8 | மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் | 432011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 4,000,000 | 2,800,000 | 10,533,000 |
| | | 432022 | வர்த்தக முற்பணக் கணக்கு | 11,000,000 | 13,000,000 | 2,000,000 |
| 9 | மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | 426011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 2,500,000 | 1,100,000 | 6,211,000 |
| 10 | பிரதம செயலாளர் செயலகம் | 420011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 7,000,000 | 3,300,000 | 17,257,000 |

ரூபா.

| தொ. இல. | அமைச்சு/திணைக்களம் | விடய இலக்கம் | செயற்பாட்டின் பெயர் | அதியுயர் செலவின எல்லை | ஆகக் குறைந்த அறவீட்டு எல்லை | அதியுயர் வரவு மீதி எல்லை |
|---|---|---|---|---|---|---|
| | I | II | III | IV | V | VI |
| 11 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிதி | 421011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,900,000 | 900,000 | 4,627,000 |
| 12 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல் | 422011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 4,000,000 | 1,800,000 | 9,109,000 |
| 13 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - பொறியியல் | 423011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,200,000 | 450,000 | 3,005,000 |
| 14 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - ஆளணி பயிற்சி | 424011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,000,000 | 570,000 | 2,373,000 |
| 15 | மாகாண இறைவரித் திணைக்களம் | 425011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,500,000 | 600,000 | 3,734,000 |
| 16 | மாகாண கட்டடங்கள் திணைக்களம் | 430011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 6,000,000 | 4,300,000 | 12,963,000 |
| 17 | மாகாண விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு | 411011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,100,000 | 1,000,000 | 3,028,000 |
| 18 | மாகாண விவசாயத் திணைக்களம் | 480011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 9,000,000 | 7,700,000 | 18,413,000 |
| | | 480022 | வர்த்தக முற்பணக் கணக்கு | 13,000,000 | 10,000,000 | 3,000,000 |
| 19 | மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் | 482011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 9,000,000 | 5,100,000 | 22,353,000 |
| | | 482011 | வர்த்தக முற்பணக் கணக்கு | 25,000,000 | 18,000,000 | 7,000,000 |
| 20 | மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் | 431011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 11,000,000 | 6,500,000 | 24,763,000 |
| 21 | மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | 412011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 4,800,000 | 2,700,000 | 13,902,000 |
| 22 | மாகாணக் கல்வித் திணைக்களம் | 460011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 380,000,000 | 230,000,000 | 647,841,000 |
| 23 | மாகாண விளையாட்டுத் திணைக்களம் | 461011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 3,000,000 | 1,900,000 | 7,633,000 |
| 24 | மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு | 413011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 1,800,000 | 1,050,000 | 4,147,000 |
| 25 | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | 450011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 140,000,000 | 90,000,000 | 311,981,000 |
| 26 | மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் | 451011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 6,000,000 | 3,800,000 | 7,900,000 |
| 27 | மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 441011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 4,000,000 | 2,100,000 | 11,712,000 |
| 28 | மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு | 414011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 2,500,000 | 750,000 | 5,300,000 |
| 29 | மாகாண தொழிற்துறைத் திணைக்களம் | 490011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 4,500,000 | 3,000,000 | 10,286,000 |
| | | 490022 | வர்த்தக முற்பணக் கணக்கு | 2,000,000 | 2,000,000 | 2,687,000 |
| 30 | மாகாண சமூக சேவைகள் திணைக்களம் | 440011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 5,000,000 | 2,800,000 | 14,153,000 |
| 31 | மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | 472011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 6,500,000 | 5,500,000 | 15,488,000 |
| 32 | மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | 403011 | அரச ஊழியர் முற்பணக் கணக்கு | 600,000 | 300,000 | 1,601,000 |
| | மொத்தம் | | | **695,800,000** | **439,870,000** | **1,271,992,000** |

01 - 284

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.